2018-ம் வருடம் அக்டோபர் மாதம் 12-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.சோ.பார்த்தசாரதி. B.P.T.M.Sc.(Psy).,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

---------

1. அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MV.IV) துறை நாள்:19/07/2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MV.IV) துறை நாள்:26/07/2018 ஆகியவற்றில் இந்நகராட்சியில் 01/04/2018-ம் முதல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்க்கண்ட அரசாணையைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1, நாள்:20/08/2018-ல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள், சுற்றறிக்கை மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்-1920 அட்டவணை-4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் ஆம்பூர் நகராட்சியில் 01/04/2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்க்கொள்ளப்படஉள்ளது.

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76-ன்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய விவரங்களின் பட்டியல்:

| வ.எண் | கட்டிடப் பயன்பாடு விபரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகைகுடியிருப்புகள்) | 50% சதவீதத்திற்குமிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள் | 100% சதவீதத்திற்குமிகாமல் |

ஆம்பூர் நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதன் அடிப்படையில் சொத்துவரி பொதுசீராய்வு செய்யவும் மேற்கண்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்க்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு ஆம்பூர் நகராட்சி பகுதியிலுள்ள 425 தெருக்கள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**A,B,C என வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரங்கள்**

| **வரிசைஎண்** | **மண்டலம்** | **தெருக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | A | 59 |
| 2 | B | 308 |
| 3 | C | 58 |
| **மொத்தம்** | | **425** |

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76; நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1, நாள்:20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி 01/04/2018-ம் தேதி முதல் ஆம்பூர் நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்துவரி பொதுசீராய்வு செய்திடவும், நகராட்சி பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தியும், ஒவ்வொரு மண்டலத்திற்கும் கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்தும் இந் நகராட்சியின் தீர்மானம் எண்.81, நாள்:10/09/2018-ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு |
| A | 1.60 | 2.50 |
| B | 1.10 | 1.70 |
| C | 0.75 | 1.15 |

மேலும், ஆம்பூர் நகராட்சியில் உள்ள 425 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி, அம்மண்டலங்களுக்கான அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை 11.9.2018-ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் வெளியிட்டும், நகராட்சி மையஅலுவலகம் மற்றும் அலுவலக விளம்பரபலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், நகராட்சி வலையதளத்தில் வெளியிட்டும், ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருந்தால் பொதுமக்கள் ஆணையருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் தெரிவிக்க அறிவிக்கப்பட்டது. ஆனால், அறிவிப்புகள் வெளியிடப்பட்டு 30 தினங்கள் 10.10.2018 அன்று முடிவடைந்துள்ள நிலையில் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் எதுவும் வரப்பெறாத காரணத்தால், ஆம்பூர் நகராட்சியில் உள்ள 425 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் தீர்மானம் எண்:81, நாள்:10.09.2018ன்படி அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்துள்ளதை இறுதி செய்ய அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1.மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2018-ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% சதவீதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட ஆம்பூர் நகராட்சி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

2. ஆம்பூர் நகராட்சியில் உள்ள 425 தெருக்கள்/சாலைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளபட்டியலில் கண்டுள்ளவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து அங்கீகரிக்கலாம்.

3. அ) மண்டலம் A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.1.60**லிருந்து **ரூ.2.50** ஆக உயர்வு செய்யப்பட்டதை உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

ஆ)மண்டலம் B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.1.10**லிருந்து **ரூ.1.70** ஆக உயர்வு செய்யப்பட்டதை உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

இ) மண்டலம் C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.0.75**லிருந்து **ரூ.1.15** ஆக உயர்வு செய்யப்பட்டதை உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

4. இந்த தீர்மானம் நிறைவேற்றப்படும் நாளிலிருந்து ஆம்பூர் நகராட்சியில் புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது சொத்துவரி திருத்தியமைக்கப்படும் அனைத்து வகையானக் கட்டடங்களுக்கும் தீர்மானத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளபடி மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு சொத்துவரி விதிப்பு செய்யவும் இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.867/2018/ அ1
தீர்மானம் எண்.93 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்கள் 2 நபர்கள் மற்றும் பரப்புரையாளர்கள் 9 நபர்கள் அரசாணை நிலை எண் 37 நாள்:13.04.2017-ன் படி ஓராண்டு காலத்திற்கு அக்டோபர்-2017 முதல் அக்டோபர்-2018 வரை ஒப்பந்த அடிப்படையில் ரிவார்டு சொசைட்டி விழுப்புரம் என்ற ஆள் வெளிக்கொணர்வு முகைமை மூலம் பணியமர்தி மேற்படி திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு செய்யப்பட்டுவருகிறது. அதற்கான ஊதியத்தொகை மேற்குறிப்பிட்ட அரசாணையின் படி ஒதிக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்தது.

மேலும் மேற்படி பணியினை தொடர நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்:26458-1/2016/தி1 நாள்:31.07.2018-ன் படி மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஒப்பந்த பணியாளர்களுக்கு உத்தேச ஊதியத்தொகை ரூபாய் 4,32,750/-(ருபாய்.நான்கு இலட்சத்து முப்பத்தெரண்டாயிரத்து ஏழுநூற்று ஐம்பது மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் நகராட்சி வருவாய் நிதிக்கு ஈடு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.எனவே,மேற்படி ஒப்பந்த பணியாளர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஊதியத்தொகை வழங்க அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ.அனுமதிக்கலாம்.

ஆ.மேற்படி ஊதியத்தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கலாம்.

**ந.க.எண்:984/2015/எச்1**

தீர்மானம் எண்.94 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் டி.என்.23BP3580 டம்பர்பிளேசர் வாகனம் தகுதிச்சான்று பெறும் பொருட்டு மராமத்து பணிகள் செய்ய செலவினத் தொகைக்கு தீர்மான எண்.18, நாள் 14.05.2018ம் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5.10.18ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பி.கோவிந்தசாமி,<br>பநீபவானி ஆட்டோகேரேஜ்,<br>லட்சுமிநகர், சான்றோர்குப்பம், ஆம்பூர். | 87700/- |
| 2 | கே.சங்கர்,<br>கே.எஸ்.ஆர்.டிங்கரிங் & பேப்ரிக் ஒர்க்ஸ்,<br>4, பெதஸ்தா மருத்துவமனை,ஆம்பூர். | 89700/- |

அலுவலகக்குறிப்பு: அ.மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் பி.கோவிந்தசாமி, பநீபவானி ஆட்டோகேரேஜ், ஆம்பூர் என்பவரின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதிபெற்று பணி மேற்க்கொண்டமைக்கும் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.873/2018/எச்1

தீர்மானம் எண்.95 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் டி.என்.23BP3604 டம்பர்பிளேசர் வாகனம் தகுதிச்சான்று பெறும் பொருட்டு மராமத்து பணிகள் செய்ய செலவினத் தொகைக்கு தீர்மான எண்.18, நாள் 14.05.2018ம் தேதியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் 5.10.18ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம்<br>திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1 | பி.கோவிந்தசாமி,<br>பநீபவானி ஆட்டோகேரேஜ்,<br>லட்சுமிநகர், சான்றோர்குப்பம், ஆம்பூர். | 86000/- |
| 2 | கே.சங்கர்,<br>கே.எஸ்.ஆர்.டிங்கரிங் & பேப்ரிக் ஒர்க்ஸ்,<br>4, பெதஸ்தா மருத்துவமனை,ஆம்பூர். | 88600/- |

அலுவலகக்குறிப்பு: அ.மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் பி.கோவிந்தசாமி, பநீபவானி ஆட்டோகேரேஜ், ஆம்பூர் என்பவரின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதிபெற்று பணி மேற்க்கொண்டமைக்கும் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1098/2018/எச்1

தீர்மானம் எண்.96 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டம்பர்பிளேசர் வாகனத்தில் உள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய தீர்மான எண்.18, நாள் 14.05.2018ன்படி ரூ.5.00லட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) செலவினத் தொகைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.மேலும் பின்களை பழுதுநீக்கம் செய்ய

5.10.18ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| .எ. | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஜி.பிரபாகரன், ஒப்பந்ததாரர், 31, அன்னை ராமாபாய் தெரு, கஸ்பா.பி, ஆம்பூர். | 23100/- |
| 2 | எம்.உதயகுமார், ஒப்பந்ததாரர், 5, கஸ்பா.எ, கவரைத்தெரு, ஆம்பூர். | 24000/- |

அலுவலகக்குறிப்பு:அ.மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஜி.பிரபாகரன்,ஒப்பந்ததாரர், ஆம்பூர் என்பவரின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதிபெற்று பணி மேற்க்கொண்டமைக்கும் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.921/2018/எச்1

தீர்மானம் எண்.97 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கல்லூரிகள், பள்ளிகள், திருமணமண்டபங்கள், தொழில் நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் (ம) அரசு சாரா நிறுவனங்களில் பணிப்புரியும் ஊழியர்களுக்கு 2017-18 இரண்டாம் அரையாண்டிற்கான தொழில்வரி 1.10.18 முதல் 30% உயர்வு செய்யப்பட்டதை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய பக்கம் 1-க்கு ரூ.2100/-வீதம் 005800 Stationery and Printing Press என்ற தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மேற்படி விளம்பர கட்டணம் ரூ.2100/-யை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1092/2018/அ2
தீர்மானம் எண்.98 அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள மினிபவர் பம்ப் நீரேற்று நிலையங்களில் உள்ள மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் உள்ள பவர் பம்ப் மோட்டார்கள், பொது கழிப்பிட கிணறுகளில் உள்ள மின்மோட்டார்கள், நகராட்சி பள்ளிகளில் உள்ள மின்மோட்டார்கள் என

மொத்தம் உள்ள 507 மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ 7.00 இலட்சத்திற்க்கு அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1154/2018/இ2

தீர்மானம் எண்.99 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந்நகராட்சிக்கு (GST) சரக்கு (ம) சேவை வரி) கட்டணம் கலால் வரி துறைக்கு செலுத்த வேண்டியுள்ளதால் திருவாளர்.அய்யா பானு (AYYABANU ASSOCIATES) ஆம்பூர் என்ற நிறுவனம் மூலம் GST (ம) சேவை வரி செலுத்தவும் உரிய சான்றிதழ் மற்றும் பதிவு கட்டணம் ஆகியவற்றிற்கு 2018-2019ம் ஆண்டுக்கான தோராய செலவினம் தொகை ரூ.15,000/-க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. அங்கீகரிக்கலாம்.

2.2018-2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிலுந்து செலவினத்தை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1367/2017/அ3

தீர்மானம் எண்.100 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந் நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிபார்த்து பராமரிப்பு பணியினை மேற்க்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் (ருபாய்.ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.மேலும்,மேற்படி பணியினை உடன் மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 25.09.2018-ம் தேதியன்று ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணயின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந் நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து பராமரிப்பு பணிகள் செய்தல் | 5.00 | 1. எம்.தீனதயாளன்<br>2.வி.பாஸ்கர் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br>1.10% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

2. அ.மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.தீனதயாளன் ஒப்பந்ததாரரின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

3.மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண். 1084/2018/இ1

தீர்மானம் எண்.101 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

10. இந் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள குளிர்சாதன பெட்டியில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யவும், அதற்காகும் செலவுத்தொகை ரூ.9900/-க்கும் (ரூபாய்.ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது. மேலும், மேற்படி குளிர்சாதன பெட்டியில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து வழங்க உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Fast Cool Services,<br>17,சந்தைப்பேட்டை மசூதி தெரு,ஆம்பூர் | 9,900/- |
| 2 | SHA City Power Tech,<br>44, ஜலால்ரோடு,ஆம்பூர் | 10,100/- |
| 3 | Hina Traders,<br>11/5,நீலிக்கொல்லைமசூதி தெரு,ஆம்பூர். | 10,150/- |

அலுவலககுறிப்பு:- அ.அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணிக்காகும் செலவினத்தொகையை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.மேற்குறிப்பிட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் Fast Cool Services,17,சந்தைப்பேட்டை மசூதி தெரு, ஆம்பூர் என்பவர் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

இ.அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1084/2018/இ1

தீர்மானம் எண்.102 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

11. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட அழகாபுரி பகுதியில் கட்டப்பட்டுள்ள நகர்புற வீடு இல்லாதோர் குடியுருப்பில் தங்க வைக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கு போதுமான பாதுகாப்பு வசதி இல்லாமையால் சுற்றுச்சுவர் கட்டி கேட் அமைக்கவும், மேற்படி குடியிருப்பு கட்டிடத்தில் அடிப்படை வசதிகள் செய்யவும்,அதற்காகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய்நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1154/2018/இ2

தீர்மானம் எண்.103 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12. இந்நகராட்சியில் பொதுமக்களுக்கு குறைந்தவிலையில் குடிநீர் வழங்க தானியங்கி குடிநீர் மையங்கள் அமைக்கும் பொருட்டு தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து EOI முறையில் 04.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | நிறுவனங்கள் விவரம் | ஒப்பந்தபுள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | Community Drinking water System (Approx 1000Ltr/hr) @ Ambur Municipality | Dharana Infrastructure Projects (P)Ltd.,<br>887,J-Block, Ist Street 13th Main Road, Anna Nagar, Chennai-40 | Rate Charged to Public – Rs.7.00/20Ltr<br>Rate remitted to ULB-Rs.1/20Ltr |
| 2 | | M. Maheswaran,<br>21, RCM St, Thirupattur | Appendix -3 படிவம் ஆணையாளர், ஜோலார்பேட்டை நகராட்சி, பெயரில் அளித்துள்ளார். |
| 3 | | Devaraj Flower Merchant, Thirupattur | விண்ணப்பம் முழுவதும் பூர்த்தி செய்யப்படாமல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

**அலுவலக குறிப்பு:-**

1. மின்னனு முறையில் விண்ணப்பிக்கப்பட்டுள்ள வ.எண் 2-ல் குறிப்பிட்டுள்ள திரு.M.Maheswaran, Thirupattur என்பவர் **Appendix -3** படிவம் **ஆணையாளர், ஜோலார்பேட்டை நகராட்சி,** பெயரில் அளித்துள்ளார்.
2. மின்னனு முறையில் விண்ணப்பிக்கப்பட்டுள்ள வ.எண் 3-ல் குறிப்பிட்டுள்ள Devaraj Flower Merchant, Thirupattur என்பவரின் **விண்ணப்பம் முழுவதும் பூர்த்தி செய்யப்படாமல் விண்ணப்பித்துள்ளார்.**
3. மேற்குறிபிட்டுள்ள காரணங்களால் வ.எண் 2 மற்றும் 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை நிராகரிக்கலாம்.
4. வ.எண் 1-ல் குறிப்பிட்டுள்ள, முன் அனுபவம் உள்ள M/s. Dharana Infrastructure Projects (P) Ltd., நிறுவனத்தின் விலை விகிதத்தினை அங்கீகரித்து பணிஉத்திரவு வழங்க அங்கிகாரம் வழங்கலாம்

**ந.க எண்:-** இ2/1062/2018.
தீர்மானம் எண்.104 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

13. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை அதிகம் பெய்ய வாய்ப்பு உள்ள நிலையில் வானிலை ஆராய்ச்சி மையம் ரெட் அலர்ட் விடுத்துள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட கம்பிக்கொல்லை, நதிசீலாபுரம், மு.கா.கொல்லை, கஸ்பா.அ மற்றும் சிவராஜபுரம் ஆகிய பகுதிகள் வழியாக செல்லும் கானாற்றில் சேர்ந்துள்ள செடி,கொடிகளை அகற்றி சுத்தம் செய்தல் பணிக்கு அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | விலைப்புள்ளித் தொகை (ஒரு மணி நேரத்திற்கு) ரூ. |
|---|---|---|
| 1 | Green Socialioty,<br>No.85,Kaveripattu Villagre,<br>Reddiyur Post,Jolarpettai | 2150/- |
| 2 | Collective Organization for Rural Educational Trust,<br>No.12, Bajanai Kovil Street, Narayanapuram, Jolarpettai | 2260/- |
| 3 | Sri Srinivasa Enterpreises,<br>No.2/7 Balapanoor,<br>Vallipattu Post,<br>Vaniyambadi. | 2300/- |

அலுவலககுறிப்பு:- அ.அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணிக்காகும் செலவினத்தொகையை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.மேற்குறிப்பிட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் Green Socialioty, Jolarpettai என்பவர் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

இ.அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளிதாரர் மூலம் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1084/2018/இ1

தீர்மானம் எண்.105 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

14. இந் நகராட்சியின் வாகனங்களை இயக்க 10 எண்ணிக்கை ஓட்டுனர்கள் பற்றாக்குறையாக உள்ளன. ஓட்டுனர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் திடக்கழிவு பணிகள் பாதிக்காமல் இருக்க மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்கள் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் 01.11.2018 முதல் 30.04.2019வரை ஆறுமாத காலத்திற்கு 10 ஓட்டுனர்களை பணியமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ.10.00லட்சம் மட்டும் (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. அனுமதிக்கலாம்.

ஆ. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1178/2018/எச்1

தீர்மானம் எண்.106 அலுவல் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

ஒம்/- சோ.பார்த்தசாரதி.
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

/உண்மைநகல்/

ஆணையாளர்,
ஆம்பூர் நகராட்சி

2018-ம் வருடம் அக்டோபர் மாதம் 4-ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.சோ.பார்த்தசாரதி. B.P.T.M.Sc.(Psy).,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

---------

இந் நகராட்சிக்கு 2018-19-ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.22866/2018/பி3 ,நாள்.23.08.2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 18.09.2018ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை ஆராய்ந்து தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப் புள்ளிகளை (PRICE BID) 01.10.2018ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் திடக்கழிவுகளை சேகரம் செய்ய மையம்(MCC) அமைத்தல் | 46.10 | 1.வி.ஜி.எழில்மாறன்<br><br>2.கே.எஸ்.என்.கன்ஸ்டிரக்சன்ஸ் | 4.96% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.11% மதிப்பீட்டை விடஅதிகம். |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால், குறைந்த விலைவிகிதம் (NEGOTIATION) வழங்குமாறு கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் வி.ஜி.எழில்மாறன் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.331/2018/இ1, நாள்:01.10.2018 மூலம் தெரிவிக்கப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும், வேலையினை செய்யும் பணியாட்களின் கூலித் தொகை அதிகமாக உள்ளதாலும், ஒப்பந்த விலை விகிதத்தை குறைத்து வழங்க இயலாத நிலை உள்ளது என சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் தனது 03.10.2018ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. 2018-19-ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியான தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் திடக்கழிவுகளை சேகரம் செய்ய மையம்(MCC) அமைத்தல் பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள்

அனைத்தும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக உள்ளது.மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதாலும், அரசு நிர்ணயித்துள்ள கால கெடுவிற்குள் பணியினை முடிக்க வேண்டி இருப்பதாலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் பக்கம்.9ல் 2.7.2ல் தெரிவித்துள்ள்வாறு, மதிப்பீட்டிற்கு 5 சதவீதம் வரை ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக இருந்தாலும், ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வி.ஜி.எழில்மாறன் ஒப்பந்தாரர் மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை அங்கீகரிக்கலாம்.

ஆ. மேற்படி திட்டத்தின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.331/2018/இ1

தீர்மான எண்.92: அலுவல்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/- சோ.பார்த்தசாரதி.
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

/உண்மைநகல்/

ஆணையாளர்,
ஆம்பூர் நகராட்சி